மதுரை சீடு குழந்தைகள் பேரவை வெளியிடும்

# புதுயுகம்

தனிச்சுற்று சிற்றிதழ்

உலகு 2
ஜூன் ஜூலை 2008
பணிமடல் 8
நன்கொடை ரூ.2/-



படம்
S.முருகபாண்டி B.A.

*உள்ளே.....*

- மக்கள் சாமிகளும், மதச்சாமிகளும்
- ஊருக்கு உழைத்த உத்தமர்
- ஒலிம்பிக் செய்திகள்
- **Need of Renaissance in Folklore**

மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும் குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.

# நாளிதழ்களில் சீடு

6 YOUNGWORLD Kaleidoscope... Madurai THE HINDU • TUESDAY, AUGUST 5, 200

## Dance to your tune

**It was a festival of sorts where about 500 children got to learn about various folk art forms and also perform them.**



**COLOURFUL:** *A cultural show.*

Folk tunes are addictive. One could see their impact on children at the "Folk deities and associated performing", a conference on folklore arts for children, organised in Madurai recently.

Evangeline Manoharan, lecturer, Department of Tamil, The American College, presented a detailed report on how the particular art form originated and how it was developed later by the people on various occasions.

He explained in depth various forms of folk art like Devarattm, Kolattam, Kavidiattam, Karagattam, Oyilattam, Paraiattam, among others.

He also gave a detailed speech how every form of dance was related to religion before transforming itself into a full-time entertainment programme. Referring to 'Parai,' the first musical instrument of Tamils, Evangeline Manoharan traced the origin and history of "Parai", and how it was used to keep people informed.

### Talk

Students R. Karthik and C. Arunkumar of The American College spoke on "Children and folkarts" and "Education through folk arts" respectively. C. Karpagajothi, a Std. XII student of OCPM Higher Secondary School spoke on "Flowers and methods of worship."

Madurai Seed, a city-based non-governmental organisation has organised the conference as part of their year-old celebration to mark the 10th year of service to underprivileged children. As many as 500 children participated and about 200 of them performed various programmes.

S.S. KAVITHA

---

தினமலர்

■ மதுரை ■ செவ்வாய் ஜூலை 29 2008

## செய்திக் கதம்பம்

### குழந்தைகள் மாநாடு

மதுரை சீடு தொண்டு நிறுவனம் சார்பில் கரும்பாலையில் நாட்டுப்புற கலைகள் குறித்த குழந்தைகள் மாநாடு நடந்தது. சீடு குழந்தைகள் பேரவை தலைவர் நாகலட்சுமி தலைமை வகித்தார். வீமன் கூத்து, காவடி, பறை, கும்மி, தேவராட்டம் உட்பட பல்வேறு கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடந்தது. நிர்வாகிகள் கார்த்திக் பாரதி, அன்பரசன், மன்சூர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

---

தினமணி

செவ்வாய்க்கிழமை, 22 ஜூலை, 2008

### நாட்டுப்புறக் கலைகள் குறித்து குழந்தைகளுக்கான மாநாடு

மதுரை, ஜூலை 21: நாட்டுப்புறக் கலைகள் குறித்து குழந்தைகளுக்கான மாநாடு, மதுரை சீடு தொண்டு நிறுவனம் சார்பில் நடைபெற்றது.

சீடு அமைப்பின் 10-ம் ஆண்டு விழாவையொட்டி கரும்பாலை சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், அமெரிக்கன் கல்லூரி தமிழ்த் துறை பேராசிரியர் மனோகரன் சிறப்புரையாற்றினார்.

தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த கற்பகஜோதி, அருண்குமார், கார்த்திக் ஆகியோர் கட்டுரைகள் வாசித்தனர்.

தெருக்கூத்து ராஜா நடனம், அம்மன் வழிபாடு, வீமன் கூத்து, காவடியாட்டம், கும்மி, கருப்பசாமி ஆட்டம், தேவராட்டம், கோலாட்டம் உள்ளிட்ட நாட்டுப்புறக் கலைகள் குறித்து விளக்கங்களுடன் நிகழ்த்திக் காட்டப்பட்டன.

மாநாட்டுக்கு சீடு குழந்தை பேரவைத் தலைவர் நாகலட்சுமி தலைமை வகித்தார்.

இதற்கான ஏற்பாடுகளை நிர்வாகிகள் பாரதி, அன்பரசன், மன்சூர் ஆகியோர் செய்திருந்தனர்.



# மக்கள் சாமிகளும், மதச்சாமிகளும்

– ச.தமிழ்செல்வன்

நாம் இதுவரை இரண்டுவிதமான சாமிகளைப் பற்றிப் பார்த்திருக்கிறோம். மக்களோடு மக்களாக வாழ்ந்து செத்துப் போனவர்களையே சாமியாகக் கும்பிடும் பழக்கத்தில் வந்த நாட்டுப்புறச் சாமிகள் அல்லது ஏழைச்சாமிகள் ஒருவகை.

இரண்டாவது வகை. கற்பனையாக மனிதர்கள் உண்டாக்கிய புலால் மறுப்பு (சைவச் சாப்பாடு) போன்ற கருத்துக்களை ஒட்டி உண்டாக்கப்பட்ட கற்பனைச் சாமிகள். அவற்றுக்கு மன்னர்களின் ஆதரவு இருந்ததால் அவை வசதியான சாமிகளாக பணக்கார சாமிகளாக மாறின. அவை பின்னர் மதங்களாக நிறுவன வசதியுடன் வளர்க்கப்பட்டன.


நம்ம ஏழைச்சாமிகளுக்கு மதம் கிடையாது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அது அது எப்படி சாமியாக உண்டானதோ அப்படியே அந்தந்த ஊர்களில் மக்களால் வழிபடப்பட்டு வந்தன.

மன்னர்கள் என்றால் யார் என்று நாம் முதலில் புரிந்து கொண்டால்தான் அவர்கள் ஏன் மதங்களுக்குப் பின்னால் நின்று ஆதரித்தார்கள் என்பது புரியும். மன்னன் என்பவன் நம்மைப்போல் சாதாரண ஆள்தான். அவன் வேலை என்ன? ''நாட்டை ஆள்வது மன்னனின் வேலை என்று நமக்குச் சொல்லித் தரப்பட்டுள்ளது. அது எப்படி அவன் மட்டும் பெரிய இவனா'' மக்களையெல்லாம் ஆள்வதற்கு அவனுக்கு யார் அதிகாரம் கொடுத்தது.

ஆதிகாலத்தில் நாமெல்லாம் குரங்குகளாக இருந்தபோது மன்னன் கிடையாது. இனக்குழுக்களாக வேட்டையாடித் திரிந்த அடுத்த கட்டத்திலும் மன்னன் கிடையாது. எல்லோரும் எந்த மரத்திலும் பழம் பிடுங்கிச் சாப்பிடலாம். எந்த விலங்கையும் வேட்டையாடலாம். காட்டில் எதை வேண்டுமானாலும் தோண்டிச் சாப்பிடலாம் என்ற நிலைதானே அப்போது இருந்தது. அதில் ஒருவன் வந்து இந்த மரம் என் மரம் இதை யாரும் தொடக்கூடாது. தொட்டால் அடிப்பேன் என்று அடியாள் வைத்துத் தகராறு பண்ணினான். அவனுக்குப் பயந்து சரி சரி அது உன் மரம்தான் நாங்க தொடவில்லை. ஆளை விடு சாமி என்று ஒதுங்கிக் கொண்டார்கள். நாள் ஆக ஆக காட்டு மரங்களெல்லாம் என்னுடையது என்று சொல்ல ஆரம்பித்து விட்டான். அடியாட்கள் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தினான். காட்டைத் திருத்தி நான் சொல்றபடி யாரெல்லாம் எனக்காக விவசாயம் செய்கிறீர்களோ அவர்களுக்கு நான் சாப்பிடத் தருவேன் என்று ஆரம்பித்தான். இப்படி அநியாயத்துக்கு அடியாள் வைத்து பொதுச் சொத்தை தனிச் சொத்தாக மாற்றிய ரவுடிகள்தான் மன்னன் என்ற பேர் பெற்று உலகின்பல பாகங்களிலும் உருவானார்கள்.

சும்மா கிடந்த காடுகளையெல்லாம் வைத்து வளைத்துப் போட்டாலும் உழுது பயிரிட்டு செல்வமாகக் குவிக்க, உழைப்பாளிகள் வேண்டுமே? ஆகவே மன்னர்கள் குதிரைப்படையை அனுப்பி காடு மலைகளில் எங்கெல்லாம் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் போய் மக்களை இழுத்து வந்து மன்னனுடைய வயல்வெளிகளில் உழச் சொல்லிக் கட்டாயப்படுத்தினார்கள். அப்படி இழுத்து வரப்பட்ட மக்கள் அடிக்குப் பயந்து மன்னனுக்காக உழுதாலும், அவர்கள் மனசெல்லாம் அவர்கள் விட்டு வந்த ஊர் நினைப்பிலும் ஊரில் விட்டுவந்த அவர்களது சாமிகள் நினைப்பிலுமே இருந்தது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" அதாவது எல்லாம் உன் ஊர்தான் எல்லோரும் உன் சொந்தம்தான். சும்மா அழிம்பு பண்ணாம மன்னனுக்காக உழுங்கப்பா என்று பாட்டெல்லாம்கூட மன்னர்கள் புலவர்களை வைத்து எழுதிப்



பாடிப் பார்த்தார்கள். ஆனாலும் மக்களின் உடம்புதான் மன்னருக்குக் கட்டுப்பட்டதாக இருந்தது. அவர்களின் மனசுபூராவும் ஊரில் விட்டு வந்த சாமிகளிடமே இருந்தது.

பார்த்தான் மன்னன். இது சரிப்பட்டு வராது உடம்பு மனசு ரெண்டுமே நம்ம கண்ட்ரோலுக்கு வரணும். அப்பத்தான் மக்கள் எப்போதும் சீராக நமக்கு அடிமையாகக் கிடப்பார்கள். என்ன பண்ணலாம் என்று திட்டமிட்டான். அப்போது அவனுக்கு உதவிக்கு வந்தது மதம். எல்லோருக்கும் ஒரே மன்னன். எல்லோருக்கும் ஒரே சாமி. ஒரே மதம் என்கிற நிலையை உருவாக்கினார்கள். ஆனால் மக்கள் ஏற்கவில்லை. உங்க சாமி சிவபெருமான். எங்க சாமி சுடலைமாட சாமியாச்சே. ரெண்டும் எப்படி ஒண்ணாகும் என்று எதிர்க்கேள்வி போட்டார்கள். மதவாதிகள் அதற்கும் ஒரு திட்டம் வகுத்தார்கள். ஏமாத்தணும்னு முடிவு பண்ணிட்டா அப்புறம் வழிகளுக்கா பஞ்சம்.

அம்சம், அவதாரம் என்கிற இரண்டு கருத்துக்களை மதவாதிகள் உருவாக்கினார்கள். காளியாத்தா யாரு? அது பார்வதியோட அம்சம் என்றார்கள். சுடலைமாடன் யாரு? அது சிவபெருமானோட இன்னொரு அவதாரம் என்றார்கள். இப்படியே நம்ம மக்கள் உண்டாக்கி வைத்திருந்த எல்லாச் சாமிகளையும் பணக்காரச் சாமிகளின் அம்சம் அவதாரம்தான் என்று கதைகளைக் கட்டிவிட்டார்கள். அதை இதிகாசமாகப் புராணமாகக் கதையாக எழுதி ஊர் ஊராகப் போய்ப் பாடிப் பரப்பவும் செய்தார்கள்.

மக்கள் உண்டாக்கிய சாமிகளுக்கு பெரியகோவிலோ கோபுரமோ உண்டா? கிடையாது. அவ்வளவு பெரிசாகக் கட்டுவதற்கு மக்களிடம் பணம் ஏது? ஆனால் மன்னர்கள் உண்டாக்கிய மதச் சாமிகளுக்கு மன்னர்கள் பெரிய பெரிய ஆலயங்கள் கோபுரங்கள் என்று கட்டினார்கள்.

ஒரு கோட்டை அழிக்காமல் அதை சின்னக் கோடாக மாற்ற என்ன செய்யவேண்டும்? அதற்குப் பக்கத்திலேயே ஒரு பெரிய கோட்டைப் போட வேண்டும். அதைத்தான் மன்னனும் மதவாதிகளும் செய்தார்கள். பெரிய பிரம்மாண்டமான கோபுரங்களுக்குக் கீழே நம்ம மக்களின் சாமிகள் அடங்கிப் போயின.

காலப்போக்கில் கோபுரச் சாமிகளை பெருந்தெய்வங்கள் என்றும் மக்கள் உண்டாக்கின சாமிகளை சிறு தெய்வங்கள் என்றும் சொல்லி சிறுமைப்படுத்தினார்கள். உண்மையில் மக்கள் உண்டாக்கிய சாமிகள் சிறு தெய்வங்களா? இல்லை. அவைதான் முதலில் உண்டான சாமிகள். நம் ஊர்களுக்கு முதலில் வந்த சாமிகள் சீனியர் சாமிகள். இந்தச் சிவபெருமான், கிருஷ்ணர், புத்தர், மகாவீரர் எல்லோருமே ஜூனிய சாமிகள் பின்னால் வெளியிலிருந்து நம்ம ஊர்களுக்குள் மன்னர்கள் உதவியோடு வந்து சேர்ந்தவர்கள்தான்.

ஆகவே அறிவியல் பூர்வமாக வரலாற்றுப் பூர்வமாக சாமிகளைப் பற்றிக் கற்றுக்கொள்ளும் நாம் நாட்டுப்புற தெய்வங்களை சிறு தெய்வங்கள் என்று சொல்லவே கூடாது. அவற்றை மக்கள் படைத்த தெய்வங்கள் அல்லது மக்கள் தெய்வங்கள் என்றுதான் சொல்லவேண்டும் மற்ற சாமிகளை மன்னர் படைத்த சாமி அல்லது மதச்சாமி என்று சொல்லலாம்.

இரண்டு சாமிகளும் வேறு வேறு தான். அடிப்படையிலேயே வேறானவே. அவற்றைக் கயிறு போட்டுக் கட்டினாலும் ஒன்று சேராது.

நன்றி : துளிர் அறிவியல் மாத இதழ்

நாட்டுப்புறக் கலைகள் குறித்து குழந்தைகளுக்காக நடத்தப்பட்ட மாநாட்டில் சிறுதெய்வங்கள் என்ற சொல்லாடல் கையாடப்பட்டது. சீடு குழந்தைகள் துளிர் இதழில் கண்ணுற்ற மேற்கண்ட கட்டுரையை புதுயுகம் இதழின் பார்வைக்கு கொண்டுவந்தனர். இக்கட்டுரையின் உள்ளடக்கம் யாவும் புதுயுகம் இதழுக்கு ஏற்புடையது. இக்கட்டுரையை வெளியிடுவதில் புதுயுகம் மகிழ்கின்றது.

# உலகமெல்லாம் வியக்கும் வண்ணம் ஆட்சி செய்த பெருந்தலைவர்

ஒவ்வொரு நாளிலுமே எண்ணிடுவேன்
கிராமங்களில் பள்ளிகள் அமைத்தவரை
படிக்காத மேதை அவரைப் போற்றிடுவேன்
இந்நாளில் நானும் பாடிடுவேன்
ஏழை மக்களின் கல்வி கண்கள் திறந்தாரே
ஒவ்வொரு ஊரிலும் மின்சாரம் தந்தாரே
இந்நாளில் நாம் அவரை நினைத்திடுவோம்
பாடிப் புகழ்ந்து போற்றிடுவோம்
நாட்டின் நலனை எண்ணியே
குடும்ப வாழ்வைத் துறந்தவர்
ஊருக்கு உழைத்த அந்த உத்தமர் தான்
- காமராஜர்
தனக்கென்று வாழாது
பிறரின் நலனைக் கருதியவர்
உலகமெல்லாம் வியக்கும் வண்ணம்
ஆட்சி செய்த பெருந்தலைவர்.

G. காளீஸ்வரி X.



எங்கே அந்த குழந்தைகள் (2)
கண்ணின் மணிகளாம்
எங்கே அந்த குழந்தைகள்
எங்கே அந்த குழந்தைகள்
வீட்டில் தேடினேன் நீ வீதியில் நிற்கிறாய்
ஏழ்மைதானம்மா ஏழ்மை தானம்மா
முகத்தை நோக்கியே நீ சோகமாய் பார்க்கிறாய்
ஏழ்மைதானம்மா (2)
முத்தமிழ் கற்கும் வயதம்மா
நீ முறுக்கு விற்பது ஏனம்மா
ஆங்கிலம் அறியும் வயதம்மா
நீ ஆட்டை மேய்ப்பது ஏனம்மா
பள்ளி சென்று பயின்றால் என்ன
பட்ட துன்பம் என்றும் போதாதா
கிழிந்த ஆடையில் நீ ஒதுங்கி மறைகிறாய்
வறுமை தானம்மா (2)
அடங்கா பசியினால் நீ மயங்கி விழுகிறாய்
வறுமை தானம்மா (2)
இலவச சீருடை கிடைத்ததம்மா
சத்துணவு பசியைப் போக்குதம்மா
பள்ளி சென்று உயரனுமே
நீ கல்வி கற்று சிறக்கனுமே
இடைநிற்றல் இல்லா கல்வி
என்றும் இன்பம் தரும் கல்வியாம் (2)
குப்பை மேட்டினிலே நீ
சுற்றிப் பிழைப்பது ஏன்
ஏழ்மைதானம்மா ஏழ்மைதானம்மா
கணக்கைக் கற்கும் வயதினிலே
நீ கடலை பறிக்க போகலாமா
அறிவைப் பெருக்கும் அறிவியலை
நீ அறிய மறுப்பது முறையாமோ
அரசுத் திட்டம் அனைவருக்கும் கல்வி
அதனால் மதிப்பு உனக்கம்மா

---

காமராஜர் பிறந்த நாளில்
புகழ் பாட போறேனுங்க (2)
தலையாட்டிக் கேட்டுக் கோங்க
கர்ம வீரர் காமராஜரை
போற்றி போற்றி பாடலாம்
மதிய உணவுத் திட்டம் தந்த
பெருந்தலைவர் அய்யா அய்யா
நம் அய்யா நம்ம அய்யா
அவர் புகழைப் பாடுவோம்
அவர் தான்யா அவர் தான்யா
நம்ம செயல்வீரர் காமராஜர்

K.பார்வதி X

## சீர்திருத்தி நாட்டை மாத்துங்க தம்பிகளே, தங்கைகளே

எந்தன் சமுதாயமே அன்பு பூ உள்ளமே
வாழ்வில் போராட்டமா
தாழ்வில் அதிகாரமா
இதை நாம் சகிப்பதா
வாழ்வுதான் தாங்குமா ( எந்தன் சமுதாயமே)
வேலை இல்லையென்றால்
வருவாய் இல்லை
இங்கு வாழ்வும் இல்லை
ஒருவழியும் இல்லை
தொழிலும் இல்லை
வேறு வழியும் இல்லை
மாற்று வேலை செய்ய
ஒரு பிழைப்பும் இல்லை
நீ செய்ததோ அல்ல நான் செய்ததோ
யார் செய்தது
இந்த நாட்டினிலே
என் அன்புள்ள கண்ணே நீ விழிப்பாயிரு
(எந்தன் சமுதாயமே)
வறுமைகண்டேன் அந்த நிலையைக் கண்டேன்
நாட்டில் வருவாயில்லா படும் பாட்டைக் கண்டேன்
உலகைக் கண்டேன் அதன் போக்கைக் கண்டேன்
நாட்டில் வறுமைபடும் பாட்டைக் கண்டேன்
நீ செய்ததோ அல்ல நான் செய்ததோ
யார் செய்தது இந்த சமுதாயத்தில்
இந்த சமுதாய அமைப்பே நீ செய்தது
( எந்தன் சமுதாயமே)

S. ஜனனி X.



V.A.O.பிரகாஷ் அவர்களின் போட்டித்தேர்வு வகுப்புகள்



Worldwide நண்பர்கள் வருகை



நாட்டுப்புறக்கலைகள் மாநாடு - சீடு தொண்டர்கள்

நாம தூங்கினா நாடு தூங்கிடும்
நகவஞ்சக பொய்களெல்லாம் ஒன்றாய் கூடிடும்
தூங்காதீங்க தூங்காதீங்க தம்பிகளா
தூங்காதீங்க தூங்காதீங்க தங்கைகளா
ஏரப்புடுச்சு உழுதவனுக்கு இங்கே இல்லை மீதி
எலும்பும் தோலும் ஏழச்சவனுக்கு இங்கே இல்ல நீதி
உழைக்கும் மக்கள் தானே உலகத்துக்கு முன்னோடி
உரிமையை கேட்க போனா தள்ளிவிட்டா பின்னாடி
சிந்தனையை ஒன்னா சேத்து தம்பிகளா
சீர்திருத்தி நாட்டை மாத்துங்க தங்கைகளா
(நாம தூங்கினா)

பா.தமிழ்செல்வி X.


# நானும்... என் வாலிபால் விளையாட்டும்...

நான் ஆறாம் வகுப்பு படிப்பதிலிருந்து வாலிபால் விளையாடுகின்றேன். 6 முதல் 9 வகுப்பு வரை ஒரு தடவை கூட நான் இருந்த அணி வெற்றி பெற்றதே இல்லை. ஆனால் எங்கள் உடற்கல்வி ஆசிரியர் எங்களை ஒன்றுமே கேட்பதில்லை. 9ஆம் வகுப்பு படிக்கும் போது நாங்களும் எங்கள் எதிரி அணியான ஒரு வசதியான பள்ளியுடன் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது, இந்த அணி கிட்ட நாங்க விளையாடுவது எங்களுக்கு அவமானம் என்றனர் அம்மாணவிகளும் அந்த பள்ளி உடற்கல்வி ஆசிரியரும். அதைக் கேட்ட எங்களுடைய உடற்கல்வி ஆசிரியர் மிகவும் வருந்தினார். எங்க அணியில் அனைவரும் மிகவும் வருந்தினர். பின் நாங்கள் ரொம்ப முயற்சி எடுத்து நல்ல வாலிபால் அணி என்று பெயர் எடுக்கக் கூடிய அளவில் எங்களை தயார்படுத்தினோம். அனைவரும் சேர்ந்து உழைத்தோம். மிகவும் முயன்று மாவட்ட மைதானத்தில் விளையாடுவதற்கு அனுமதி பெற்றோம். விளையாடவும் சென்றோம். எங்களோட எதிர் அணி 2வது வசதியான பள்ளியை சந்திக்க வேண்டியிருந்தது. அவங்களோட உடைகள், காலணிகள் போன்றவை அனைத்தும் மிகவும் பிரமாதமாக இருந்தது. நாங்கள் சாதாரணமாக ஒரு சாட்ஸ், பனியன் மட்டும் அணிந்திருந்தோம்.

போட்டி ஆரம்பித்தது. 12.30 மணிக்கு போட்டி ஆரம்பித்தது. மைதானத்தில் நின்னா காலை வெந்நீரில் வைத்தது போல் இருந்தது. அனைவரும், ஒற்றை காலை தூக்கி தூக்கி மாத்தி மாத்தி வச்சோம். அதை கண்ட நடுவர் அப்படியெல்லாம் நிக்காதீங்க. அணியை வெளிய அனுப்பி விடுவோம் என்றார். அவர் எங்களுடைய சூழ்நிலைகளை புரிந்து கொள்ளவில்லை. நாங்களும் எங்களுக்கு கிடைத்த வாய்ப்பை இழக்கக் கூடாது என்று ரொம்ப கஷ்டப்பட்டு விளையாடினோம். பந்தை கவனிப்பதைக் காட்டிலும், காலை கவனிப்பதாகவே இருந்தோம். இருந்தும், எங்கள் அணி வின்னர்(அப்போது நான் 10ஆம் வகுப்பு) என்ற இடத்தைப் பெற்றோம். பின் அடுத்ததாக 3வது வசதியான பள்ளியுடன் விளையாடினோம். அப்பவும் நாங்கள் தான் வின்னர். பின்னர் மாநில அளவில் எங்கள் அணி தகுதி பெற்று கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவிலில் சென்று விளையாடினோம். பின் பள்ளி அளவில் நடந்தப் போட்டியில் எங்களை உசுப்பேற்றிய வசதியான முதல் பள்ளி எங்களுடன் மறுபடியும் மோதியது. நாங்கள் விளையாடியதைப் பார்த்து நீங்க T.S.U.M. பள்ளியா என்று கேட்டனர். அதற்கு நாங்கள், ஏன் T.S.U.M. பள்ளி விளையாடதா என்று கேட்டோம். அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. அவங்களோடு விளையாடினதிலும் நாங்கள் தான் வின்னர்.

பின் வாலிபால் என்றாலே T.S.U.M. பள்ளி அணி மிகவும் வலிமையானது என்ற பெயரும் பெற்றோம். எங்கள் பள்ளி இன்றும் வாலிபால் விளையாட்டில் மிகவும் பெயர் பெற்றுள்ளது. நான் இப்பொழுது ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் வாலிபால், கடற்கரை வாலிபால், throw ball அணிகளில் உள்ளேன்.

என்னை உருவாக்கிய எங்களுடைய உடற்கல்வி ஆசிரியரான பாலகிருஷ்ணன் ஐயா அவர்களுக்கு என் வணக்கங்கள்.



P.சரவணப்பிரியா
**XII**


T.S.U.M பள்ளி அரசு உதவிப் பெறும் நடுத்தர வசதிகள் கொண்ட எளிய பள்ளி என்பது குறிப்பிடத்தக்கது.

## தேன்கூடு 2008 ஜீன்-ஜீலை விருப்ப சேமிப்பில் ஈடுபடும் குழந்தைகளும் அவர்கள் சேர்த்த தொகைகளும்

| | வாண்டுகள் அரங்கம் | | | | வேர்கள் அரங்கம் | | | | கனவுகள் அரங்கம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மாதம் | I | II | III | IV | V | VI | VII | VIII | IX | X | XI | XII |
| ஜீன் | 67 | 142 | 160 | 244 | 363 | 613 | 369 | 358 | 402 | 360 | - | 479 |
| ஜீலை | 173 | 364 | 296 | 502 | 586 | 1262 | 664 | 661 | 787 | 671 | 164 | 900 |
| | 240 | 506 | 456 | 746 | 949 | 1875 | 1033 | 1019 | 1189 | 1031 | 164 | 1379 |
| மொத்தம் | | | | 1948 | | | | 4878 | | | | 3763 |



| | |
|---|---|
| வாண்டுகள் அரங்கம் | ரூ. 1948 |
| வேர்கள்அரங்கம் | ரூ. 4876 |
| கனவுகள் அரங்கம் | ரூ. 3763 |
| மொத்தம் | ரூ. 10587 |



K.அன்பரசன் M.A., N.நாகலெட்சுமி

# கவிதைச்சோலை

வெளிச்சம் கலந்த இருட்டு
கருப்பு உருவம் ஒன்று துரத்த
அச்சத்தினால் நான் வேகமாக ஓட
அதுவும் என்னைத் துரத்த
வெளிச்சத்திற்கு வந்த பிறகு தான்
அது என் நிழல் என்று தெரிந்தது

R.சுவேதா
IX

*Star has five ends,*
*Trapezium has four ends,*
*Triangle has three ends,*
*Line has two ends,*
*Point has one end.*
*But friendship has no end*

- M.Manickaraja, IX

*Great friends*
*Care for each other*
*Close friends*
*Understand each other*
*True friends*
*Stay for ever*
*Births comes only*
*Death comes only once*
*(But)*
*Friendship has no end.*



Samundeeswari
XII

வலி உணரா வாழ்க்கையில்
இல்லை சுவாரஸ்யம்
வலியுடன் வாழ்ந்து பார்
மரணம் கூட இனிக்கும்.

C.தனலெட்சுமி
XI



தாயே!

அன்று கருவறை எனும் சிறையினுள்
கருத்துடன் எனை வளர்த்தாய்
இன்று அன்பு எனும் சிறையினுள்
அரவணைப்புடன் எனை வளர்க்கிறாய்
நாளை நீ முதுமை அடையும்போது
உனை தனிமை எனும் சிறையினுள் தள்ளாமல்
கருத்துடன் வளர்ப்பேன் நான்!

M.தங்கலெட்சுமி
XII

நாளை என்பது நிச்சயம் இல்லை
நினைவில் இருப்பது நேற்று மட்டும்தான்
இன்று மட்டுமே உனக்கே உனக்கு
சேர்ந்து வா சரித்திரம் படைக்க

K.ரம்யா
XI

## என் அன்பு அம்மா



எனக்கு என் அம்மாவை ரொம்ப ரொம்ப ரொம்ப பிடிக்கும். நான் சின்ன வயசா இருந்தப்ப என்கிட்ட மிகவும் பாசம் காட்டியது என் அம்மாதான். தான் படிக்கவில்லை என்றாலும் என் பிள்ளையாவது படிக்கட்டும் என்று என் மீது அன்பும், அக்கறையும் காட்டுவது என் அம்மாதான். எனக்கு நல்ல விஷயங்களைக் கூறி நல்வழிப்படுத்துவது அவர்தான். இன்றுவரை எந்த உதவி கேட்டாலும் இல்லை, முடியாது என்று சொல்லாமல் கடன் வாங்கியாவது உதவுவாங்க என் அம்மா. அவருடைய கனவு நான் நன்றாக படித்து, நல்ல வேலை செய்து முன்னேற வேண்டும் என்பதுதான். கண்டிப்பாக, நான் என் அம்மாவின் ஆசையை நிறைவேற்றி மகிழ்ச்சியைத் தருவேன். தான் படும் கஷ்டங்களை குழந்தைகள் படக் கூடாது என்று எண்ணி கஷ்டத்தை தனதாக்கிக் கொண்டு எனக்கு மகிழ்ச்சியை மட்டும் தருவார். எனக்கு நல்ல ஆலோசனைகளைத் தந்து ஆக்கமும், ஊக்கமும் தருவது என் அம்மாவே. என் அம்மாவை இந்த உலகில் யாருக்கும் கிடைக்காத அரிய பரிசாகவே நான் எண்ணுகிறேன். என் அம்மா நூறு வயது வரை வாழ வேண்டும் என இறைவனை வேண்டுகிறேன்.

M.மகுடபதி
XII

# நீங்களும் வரையலாமே....



P.மணிகண்டன்
VII



P.மதன்குமார்
V



K.கௌசல்யா
VII



M.கோபால்
VII



K.ஆனந்தகுமார்
VI



K.சத்யா
VIII



M.சூர்யா
VII




V.ஜென்சிராணி
VII




S.பாபுஜி
VII


# நீங்களும் வரையலாமே....



S.சரவணன்
X




K.பார்வதி
X




N.திலகவதி
IX

1 முதல் 10 வரை - சில வடிவங்கள்


1 -
2 -
3 -
4 -
5 -
6 -
7 -
8 -
9 -
10 -



J.பாண்டிச்செல்வி
IX



M.மாணிக்கராஜா
IX



K.அசோக்
X

**மருத்துவக் கல்லூரிகளில் இறந்தவர்கள் உடலைப்பாடம் பண்ணி, கெடாமல் வைத்திருக்கிறார்களே...எப்படி?**

மருத்துவக் கல்லூரிகளில் முழு உடலை வைத்திருக்கிறார்களா, என்ன? அனாட்டமி பாடத்துக்காக அங்கே ஒரு கை, இங்கே ஒரு கால், வயிறு, இதயம் என்று பாகம் பாகமாக வைத்திருப்பார்கள். விநோதமான கருக்குழந்தைகளையும் வைத்திருப்பார்கள். உடல் கெட்டுப்போவது பாக்டீரியாவின் தாக்குதலினால். புழு, பூச்சி, பாக்டீரியா இவை எதும் அணுகாமல் வைத்துக் கொண்டால் உடல் கெடாமல் பாதுகாக்க முடியும். இதற்கு பார்மலின் போன்ற திரவங்களில் மிதக்க வைப்பார்கள். எகிப்தியர்களுக்கு உடலைக் கெடாமல் வைத்திருக்கும் மம்மி ரகசியம் தெரிந்திருந்தது. இரண்டாயிரம் வருஷம் கழித்தும் அவர்கள் மம்மியாக்கிய உடல்கள் இன்னும் மியூசியங்களில் இருக்கின்றன.

**காலைக் கதிரவனையும், மாலைக் கதிரவனையும் சாதாரணமாகக் காணும் நம் கண்கள், உச்சிக் கதிரவனைக் கண்டால் கூசுகிறதே...அது ஏன்?**

பூமியைச் சுற்றியிருக்கும் காற்று மண்டலம் ஆக்ஸிஜன், நைட்ரஜன் போன்ற பல வாயுக்கள், தூசி, நீராவி போன்றவற்றால் செய்யப்பட்ட ஒரு 'கூலிங் கிளாஸ்' மாதிரி. காலையிலும், மாலையிலும் கதிரவனின் ஒளி இந்தக் காற்று வெளியில் (பக்கவாட்டில்) ஊடுருவ வேண்டிய தூரம் அதிகமாக இருப்பதால், அந்த ஒளி பலவாறு சிதறிப் போகிறது. ஆரஞ்சு, சிவப்பு, வகை ஒளி மட்டும் அதிகம் சிதறுவதில்லை. உச்சி வெயிலின்போது சூரிய ஒளி மேலிருந்து நேராகக் காற்று மண்டலத்தை ஊடுருவுகிறது. இந்தத் தூரம் குறைவு. ஆரஞ்சு வர்ணத்தை மட்டும் அனுமதிக்கும் கூலிங் கிளாஸ் நம் காற்று மண்டலம்.

**பச்சைத் தண்ணீரில் முழுக்க குளித்தாலும் உடல் நலம் கெடுவதில்லை. ஆனால் மழை நீரில்(சுத்தமானதுதான்) நனைந்து விட்டால் உடல்நலம் கெட்டுப் போவதேன்?**

மழை நீரில் நனைவதால் உடல் நலம் கெட்டுப் போவதில்லை. வேளை கெட்ட வேளையில் திடீரென்று தொப்பலாக சகலமும் நனைந்து போவதாலும், வீட்டுக்கு வந்ததும் ஆ! எனக்கு ஒன்றும் ஆகாது என்று சவடால் பேசிச் சரியாகத் தலை துவட்டிக் கொள்ளாமல் இருப்பதாலும் அல்க.!

**மருத்துவ உலகின் தந்தை என்று ஹிப்போகிரடஸை ஏன் எதற்கு அழைக்கிறார்கள்.**

அவர் காலத்துக்கு முன்பெல்லாம் தலைவலி, ஜுரம், சொறி என்று எது வந்தாலும் 'அது கடவுள் தந்த தண்டனை' என்பது மக்களின் நம்பிக்கை. ஹிப்போகிரடஸ்தான் 'அதெல்லாம் சும்மா...உடம்பின் உள்ளே ஏற்படுகிற கோளாறுகள் நோய்கள்' என்று தெரிவித்தார். சில நோய்களுக்கான ட்ரீட்மெண்டுகளையும் செய்ய ஆரம்பித்து விட்டார். இப்போது சொல்லுங்கள்...அவர் மெடிக்கல் சப்ஜெக்டுக்கு அப்பாதானே?

**கப்பல், பஸ் போன்ற பயணங்களின்போது சிலருக்கு மட்டும் வாந்தி வருவது ஏன்?**

பயணத்தின் ஆட்டத்தினால் காதுகளுக்குள் இருக்கும் பாலன்ஸ் மெக்கானிஸம் தடைப்பட்டு ஒருவிதமாக விழுவதுபோல உணர்ச்சி ஏற்படுத் தலைசுற்றல், மயக்கம் ஏற்படுகின்றது.

**கம்ப்யூட்டரில் நினைவில் வைத்துக் கொள்ளும் பகுதி எந்தப் பொருளால் ஆனது அது எப்படி எண்களை நினைவில் வைத்துக் கொள்கிறது.**

ராண்டம் ஆக்ஸஸ் மெமோரி என்று சிலிக்கனிலான சின்ன சில்லு. அது உங்கள் செய்தியை, என்கிற பைனரி இருநிலை வடிவத்துக்கு மாற்றிக் கொண்டு, அதனுள் இருக்கும் நுட்பமான ஸ்விட்ச்சுகளில் லேசான மின்சாரம் போகும்போது 1, போகாத போது இப்படிச் சேகரித்து வைத்துக் கொள்கிறது.

P. பாண்டியராஜன் XII

## பசுமைபுரட்சி என்னும் பாழ்திட்டம்

இந்தியாவில் அமல்படுத்தப்பட்ட பசுமைப்புரட்சிதான் இதுவரை மனிதனால் மேற்கொள்ளப்பட்ட சீரழிவுகளில் மோசமானது. அந்தத் திட்டம் உடனடியாக பலனளிப்பது போன்ற தோற்றத்தை உண்டாக்கியிருக்கிறது. வருடம் முழுவதும் அதிக தண்ணீர் தேவைப்படும் பயிர்களைப் பயிரிடப் பழகி, விளைநிலங்களை பாழ்படுத்தி விட்டது இந்தியா என்று வருத்தப்பட்டிருப்பவர் இங்கிலாந்து இளவரசரும், இயற்கை ஆர்வலருமான சார்லஸ்.

P.கௌதம் VII

## எங்கே கண்டுபிடியுங்கள்

### உங்கள் உடைகளின் பிறிதொரு சொற்களை!

| | |
|---|---|
| 1. வடகம் | 1. மேலாடை |
| | 2. இடுப்புத்துணி |
| | 3. கைத்துண்டு |
| 2. ஏகாசம் | 1. தோள்துண்டு |
| | 2. இடையில் கட்டுவது |
| | 3. தலைப்பாகை |
| 3. மெய்ப்பை | 1. மேல்துண்டு |
| | 2. சட்டை |
| | 3. கைக்குட்டை |
| 4. முண்டாசு | 1. வேஷ்டி |
| | 2. தலைப்பாகை |
| | 3. இடுப்புத்துண்டு |
| 5. கௌபீனம் | 1. கோவணம் |
| | 2. கைத்துண்டு |
| | 3. கால்சட்டை |
| 6. முட்டாக்கு | 1. இடை மூடும் ஆடை |
| | 2. தலை மூடும் துணி |
| | 3. தோள்துண்டு |
| 7. விசிகை | 1. மார்பு ஆடை |
| | 2. இடை ஆடை |
| | 3. கைத்துண்டு |

விடைகள் :
1. மேலாடை
2. தோள்துண்டு
3. சட்டை
4. தலைப்பாகை
5. கோவணம்
6. தலை மூடும் துணி



– M.தங்கலெட்சுமி XII

## மசனோபு ஃபுகோக்கா

விவசாயத்திற்கு புது அர்த்தம் கொடுத்தவர் ஜப்பான் விவசாயி மசனோபு ஃபுகோக்கா. நிலத்தை உழக்கூடத் தேவையில்லை என்ற புகோக்காவின் கோட்பாடு பிரமிக்க வைப்பது. இயற்கையை எதிர்த்து சண்டையிடாமல் அதன் போக்குடன் நேசமாக வாழ்ந்தால்தான் பூமியில் சொர்க்கத்தை காணலாம் என்று நிரூபித்தவர் ஃபுகோக்கா.

S.முத்துகணேஷ் VII

1. 'எண்கள் எனது நண்பன்' என கூறியவர்?
   ஸ்ரீனிவாச ராமானுஜம் (Srinivasa Ramanujam)
2. Log என்ற முறையை அறிமுகப்படுத்தியவர்?
   ஜான் நேப்பியர் (John Napier)
3. 0 என்னும் எண்ணை கண்டுபிடித்தவர்கள்?
   இந்தியர்கள் (Indians)
4. 'அறிவியலின் இளவரசி' என அழைக்கப்படும் பாடம்?
   கணிதம் (Mathematics)
5. Ink பேனாவை கண்டுபிடித்தவர் யார்?
   வாட்டர் மேன் (Waterman)

M.மாணிக்கராஜா IX

## கடிகாரத்தில் இருக்கும் வாட்டர் ப்ரூஃப் எப்படி இயங்குகிறது?

வாட்டர் ப்ரூஃப் என்று தனியாக சமாசாரம் எதுவும் இல்லை. கடிகாரத்துக்குள் தண்ணீர் புகாமலிருக்க கடிகாரத்தை ஸீல் செய்யும் முறையைத் தான் 'வாட்டர் ப்ரூஃப்' என்று சொல்வார்கள். வாட்டர் ப்ரூஃப் என்று யாராவது எதையாவது தனியாகக் காட்டி விற்க முயன்றால், பைக்குள் இரண்டு கைகளையும் போட்டுக் கொண்டு விடுங்கள்... பணத்தை எடுக்காதீர்கள்!



தேன்கூடு அட்டை வழங்கும் நிகழ்வு

# எல்லா கேள்விகளுக்குமே உங்களால் பதில் சொல்ல முடியுமா? – எழுத்தாளர் சுஜாதாவின் பதில்

யாராலும் முடியாது. உங்கள் கேள்விகளால் தூண்டப்பட்டு உங்களுடன் சேர்ந்து அறிவியல் உலகில் நுழைந்து பார்த்து நானும் வியக்கத்தான் முடியும். விஞ்ஞானம் என்பது முழுமையான ஞானம் அல்ல...ஒருவிதமான சிந்திக்கும் முறை. அதன் சாகசம் எல்லாவற்றையும் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதே. மேகங்களைப் பற்றி, மழை பொழிவதைப் பற்றி, தொல்காப்பியத்தின் காலத்தைப் பற்றி, குழந்தை பிறப்பதைப் பற்றி, நேற்று சாப்பிட்ட சோறு இன்று எப்படித் தண்ணீர் குழாய் அடிக்கத் தெம்பாக மாறுகிறது என்பது பற்றியெல்லாம் சிந்திக்க வைத்து, பரிசோதனைகள் மூலம் பதில் கண்டுபிடிப்பதுதான் அதன் குறிக்கோள். விஞ்ஞானம் பல "ஏன்"களுக்குப் பதில் சொன்னாலும் சில 'ஏன்'களுக்கு அதனிடம் பதில் இல்லை. உதாரணம் சூரியன் ஏன் வட்ட வடிவில் இருக்கிறது. ஏன் முக்கோண வடிவத்தில் இருக்கக்கூடாது.

'எப்படி' என்று கண்டுபிடிப்பதில்தான் விஞ்ஞானத்துக்கு ஆதாரமான புரிப்பு ஏற்படுகிறது.!

ஆகவே, நம்மால் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவே முடியாது. பால் வீதி **(Milky Way)** என்று அழைக்கப்படும் நம்முடைய கேலக்ஸியில் மட்டுமே கோடிக்கணக்கில் நட்சத்திரங்களும் கிரகங்களும் இருக்கின்றன. இப்படிக் கோடிக்கணக்கான கேலக்ஸிகள் இருக்கின்றன. அவையெல்லாவற்றையும் அறிவது மனிதனின் நேற்றைய - இன்றைய நாளைய ஏன், மனிதனின் ஒட்டு மொத்தமான சரித்திர காலத்தில்கூடச் சாத்தியமில்லை. பிரபஞ்சத்தின் வடிவத்துக்கு ஏன் போக வேண்டும் ஒரு கல் உப்பு-ஸோடியம் க்ளோரைடு அதில் எத்தனை அணுக்கள் இருக்கின்றன தெரியுமா? நூறு கோடி! பொழுது போகவில்லையெனில் ஒன்று என்று எண்ணிக்கையிட்டு அருகே பதினாறு சைபர் போட்டுக் கொள்ளுங்கள். நம் மூளைக்குள் இருக்கும் நியூரான்களின் எண்ணிக்கை அத்தனையும் கணக்கிட்டால்கூட ஒரே ஒரு கல் உப்பை முழுமையாக அறிவதற்குப் போதாது.

ஐஸக் நியூட்டன் (பதினேழாம் நூற்றாண்டு...கால்குலஸ்ஸின் அடிப்படையைக் கண்டுபிடித்தவர். மனித சரித்திரத்திலேயே மிகப் பெரிய விஞ்ஞானி என்று கருதப்படுபவர்) தன் அந்திமக் காலத்தில் சொன்னார்.

நான் கடற்கரையில் விளையாடும் ஒரு சிறுவன். இங்கே ஒரு கூழாங்கல், அங்கே ஒரு அழகான சங்கு என்று கண்டுபிடித்துப் பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கையில் எதிரே உண்மை என்ற மாபெரும் சமுத்திரம் இன்னும் கண்டறியப்படாமல் பரவிக் கிடக்கிறது.

**ஈரத்துணிகளை வெயிலில் உலர்த்தினால் வாடை ஏதும் இல்லை. நிழலில் உலர்த்தினால் அழுக்குவாடை உண்டாவது ஏன்?**

வெயிலில் உள்ள அல்ட்ரா வயலட் மற்றும் நுண் அலைக்கதிர்கள் ஈரத்துணியில் கிருமிகள் சேராதபடி பார்க்கின்றன. நிழலில் உலரும் போது முதல் ஒன்றிரண்டு மணி நேரத்தில் துர்நாற்றம் தரும் பாக்டீரியாக்கள் வளருகின்றன. பழைய தண்ணீரில் அலசுவதற்கு பதிலாக புதிய நீரில்அலசினால் துர்நாற்றத் தொல்லை இருக்காது.

A.ஷர்மிளா, VII

கேள்விகள் கேட்கும் பழக்கம் எப்போது குறைகிறது. மற்றவர் கேள்விகளுக்குப் பதில் சொல்லும் நிர்பந்தம் நம் மீது திணிக்கப்படும் போது என்று சொல்லி எழுத்தாளர் கி.ராஜநாராயணன் ஒரு முறை இப்படி எழுதினார். குழந்தைகள் 'இந்தக் கடல் ஏன் நீலமாக இருக்கிறது?', 'சூரியன் எப்படி உதிக்கிறது?' என்று அப்பாவையோ, அம்மாவையோ சதா கேள்வி கேட்டுத் துளைப்பார்கள். நாம் அவர்களை பள்ளிக் கூடத்தில் சேர்த்தவுடனேயே வாத்தியார் பிரம்பை கையிலெடுத்துக் கொண்டு அவர்களை கேள்வி கேட்க ஆரம்பித்து விடுகிறார். அப்போதே அந்த குழந்தைகளின் குழந்தைமைகளும், கேள்விகளும் செத்துப் போகின்றன.



## சாதனை படைத்த வில்மா ருடால்ப்

சோதனைகளை வென்று சாதனை படைத்தவர் என்றால் அது வில்மா ருடால்ப் என்ற வீராங்கனைக்குத்தான் பொருந்தும்.

தற்போதைய அமெரிக்க வீராங்கனைகள் கெயில் டேவர்ஸ், பிளாரன்ஸ் கிரிஃபித் ஜாய்னர், மரிடான் ஜோன்ஸ் போன்றவர்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர்.

அமெரிக்காவில் டென்னஸி மாகாணத்தில் கருப்பர் இனத்தில் பிறந்த ருடால்ப் கிராமப்புறத்தில் வளர்ந்தவர். பிறக்கும்போது வெறும் நான்கரை பவுண்ட் எடையுடன்இருந்தார். அவரது பெற்றோருக்கு மொத்தம் 22 குழந்தைகள். அதில் இருபதாவதாகப் பிறந்தவர் வில்மா.

சிறுமியாக இருக்கும்போது போலியோ, நிமோனியா, விஷக் காய்ச்சல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட ருடால்ப் ஓரளவு பக்கவாதத்தாலும் பாதிக்கப்பட்டார். 8 வயது வரை அவரால் நடக்கக் கூட முடியவில்லை.


அவர் ஒலிம்பிக் வீராங்கனையாக உருவெடுப்பார் என யாரும் கற்பனை செய்துகூட பார்த்திருக்க முடியாது. ஆனால், 11 வயதில் அவர் கூடைப்பந்து விளையாட்டில் ஈடுபடத் துவங்கினார். அதன் பின்னர் சிறிது சிறிதாகஓடத் துவங்கினார்.

நடக்கவே முடியாது எனக் கருதப்பட்டவர். 1960–ம் ஆண்டு ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் சக வீராங்கனைகளையும், ரசிகர்களையும் அதிரவைத்தார்.

100 மீட்டர், 200 மீட்டர் ஓட்டங்களில் தங்கம் வென்றதுடன் 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் அமெரிக்கக் குழு தங்கம் வெல்வதற்கு முக்கியக் காரணமாகவும் இருந்தார்.

தடகள உலகம் அவரை என்றும் மறக்காது.

## விளையாட்டு வரலாற்றில் பொன்னாள்!



2008 ஆகஸ்ட் 11-ம் தேதி. இந்திய விளையாட்டு வரைபடத்தில் பொன்னான நாள். தனிநபர் ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வென்று சரித்திரம் போற்றும் நாயகனாகியுள்ளார். சண்டிகரைச் சேர்ந்த 25 வயது துப்பாக்கி சுடும் வீரர் அபிநவ் பிந்த்ரா.

113 கோடிக்கும் மேலான மக்கள் தொகையைக் கொண்ட பாரதம், உலக ஜாம்பவான்கள் கூடும் ஒலிம்பிக்கில் அழியெடுத்து வைத்தது. 1900 ஆண்டு ஆம்ஸ்டர்டாமில் நடந்த போட்டி முதல் 1956-க்கும் ஆணடு மெல்போர்னில் நடந்த ஒலிம்பிக் வரை ஆடவர்ஹாக்கி குழு தொடர்ந்து தங்கம் வென்று கௌரவம் அளித்தது. அதன்பிறகும் சில போட்டிகளில் வெண்கலம். தங்கம் என வென்றாலும் 29-வது பெய்ஜிங் போட்டிக்கு பங்கேற்கும் தகுதியை அந்த அணி பெறவில்லை. இதனால் வருத்தமுற்ற கோடிக்கணக்கான ரசிகர்களுக்கு, எம்பிஏ பட்டதாரி அபிநவ் பிந்த்ரா ஆறுதல் அளித்துள்ளார்.

ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு பெருமை சேர்த்துள்ளவர்களை எளிதில் பட்டியலிட்டு விடலாம். நார்மன் பிரிட்சார்டு (தடகளம்), கசப தாதா சாஹேப் யாதவ் (மல்யுத்தம்), லியாண்டர் பயஸ் (டென்னிஸ்), கர்ணம் மல்லேஸ்வரி (பளு தூக்குதல்), ராஜ்யவர்தன் சிங் ரதோட் (துப்பாக்கி சுடுதல்) ஆகியோர் வரிசையில் தற்போது அபிவ் பிந்த்ரா, சுசில்குமார் (மல்யுத்தம்), விஜேந்தர் (குத்துசண்டை) போன்றோர் சேர்ந்துள்ளனர்.

இந்தியாவில் விளையாட்டுக்கு மிகப்பெரிய அளவில் ரசிகர்கள் பட்டாளம் இருந்தாலும், ஆட்சியாளர்கள் அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. உள்கட்டமைப்பு வசதிகளைக் கூட்டுவது, வெளி நாடுகளுக்கு வீரர்களை அனுப்பி திறமையை மேம்படுத்தச் செய்வது போன்ற அடிப்படையான அம்சங்களில் கூட இந்திய விளையாட்டு அமைப்பு மிகவும் பின்தங்கியே உள்ளது.

1975-ம் ஆண்டு ஆடவர்ஹாக்கி குழுவின் உலகக்கோப்பை வெற்றி, 1983-ல் இந்திய கிரிக்கெட் அணியின் உலகக் கோப்பை வெற்றிகளுக்கெல்லாம் மேலானது பிந்த்ராவின் ஒலிம்பிக் வெற்றி. அது மாதரியான வெற்றிகள் எதிர்காலத்திலும் தொடர்வதற்கு இந்திய அரசும் விளையாட்டு ஆணையமும் திட்டமிட வேண்டும்.

பெய்ஜிங் சென்றுள்ள இந்திய அணியில், துப்பாக்கி சுடுதல் பிரிவில் பதக்கம் கிடைக்க பெரிதும் வாய்ப்பு உள்ளது என பெரும்பாலான முன்னாள் ஒலிம்பிக் வீரர்கள் கருத்து தெரிவித்தனர். அது பொய்யாகவில்லை. ஆனால் அவர்கள் கூறிய மற்றொரு முக்கியமான கருத்து: கிரிக்கெட்டானது பிற ஒலிம்பிக் விளையாட்டுகளைப் பின்னுக்குத் தள்ளுகிறது என்பது. என்றாலும் கிரிக்கெட்டை நாம் ஒதுக்க வேண்டாம். அதற்கு ஆதரவு அளிக்கும் பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்ற விளையாட்டுகளுக்கும் ஆதரவு அளித்து, எதிர்காலத்தில் மேலும் பல பிந்த்ராக்கள், பல சுசில்குமார்கள், பல விஜேந்தர்கள் உருவாக வாய்ப்பு அளிக்க வேண்டும்.

1960-ம் ஆண்டு ரோம் ஒலிம்பிக்கில் 'பறக்கும் சீக்கியர்' மில்கா சிங்கும், 1984 லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக்கில் 'தங்கமங்கை' பி.டி. உஷாவும் நூலிழையில் வெண்கலப் பதக்கத்தை இழந்தனர். அதை மிகப்பெரிய கௌரவமாகக் கூறிக்கொள்ளும் இந்திய ஆர்வலர்கள் பிந்த்ரா, சுசில்குமார், விஜேந்தர் இவர்களின் இமாலய சாதனையை வாழ்நாள் முழுக்கமறக்கமாட்டார்கள்.

# பண்டைய ஒலிம்பிக்

உலக ரசிகர்கள் போற்றும் ஒலிம்பிக் பந்தயம், 1896-ம் ஆண்டு முதல் நவீன ஒலிம்பிக் போட்டியாக நடைபெற்றுவருகிறது. ஆனால் பண்டைய காலத்திலும் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அதில் பல சுவாரஸ்யங்கள் இருந்துள்ளன.

போட்டிக்கு முன்பு பன்றியைப் பலியிட்டு அதன் ரத்தத்தைத் தொட்டு நெற்றியில் வைத்த பின்னர் வீரர்கள் உறுதி மொழி எடுத்துக் கொள்வது, பிறந்த மேனியுடன் போட்டியில் பங்கேற்பது போன்ற வித்தியாசமான நிகழ்வுகள் பண்டைய கால ஒலிம்பிக்கில் இருந்துள்ளன.

ஒலிம்பிக் பந்தயம் தொடங்கிய காலம் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். முதன் முதலாக தொடங்கிய ஒலிம்பிக் போட்டி கி.மு. 1253-ம் ஆண்டுக்கும் கி.மு.884-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் இருக்க வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். ஆனால் கி.மு. 776-ம் ஆண்டு நடந்த பந்தயத்தில் இருந்து தான் வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

கிரேக்க நாட்டிலுள்ள புனிதமான இடம் ஒலிம்பியா. அங்கு தோன்றிய விளையாட்டுகளைத்தான் ஒலிம்பிக் பந்தயங்கள் என்று அந்நாட்டு மக்கள் அழைத்துள்ளனர்.

கிரேக்க நாட்டில் கடவுள்களுக்கு பஞ்சம் இல்லை. வீரத்தில் அவர்கள் வைத்திருந்த நம்பிக்கையை விட மதத்தில் ஆழ்ந்த பற்றும் அதிகமான நம்பிக்கையும் வைத்திருந்துள்ளனர். அவர்களின் தலைமைக் கடவுள் 'சியஸ்'. (இந்துக்களின் சிவனைப் போன்றது). அக்கோயிலின் முன்னே அமைக்கப் பெற்ற விளையாட்டு அரங்கிலேதான் அத்தனை ஒலிம்பிக் பந்தயங்களும் நடந்தேறியுள்ளன.

ஒலிம்பிக் பந்தயம் என்றால் கிரேக்க நாட்டு மக்களுக்கு மிகவும் விருப்பம். பந்தயம் நடக்க இருக்கும் நாளுக்கு பல மாதங்களுக்கு முன்பே அவர்கள் தங்களை ஆயத்தம் செய்து கொண்டுவிடுவார்கள்.

ஒலிம்பிக் போட்டியைப் பார்ப்பது புனிதமான இறைவன் ஆலயத்துக்குப் போய்வரும் மதச்சம்பிரதாயம் போன்று அவர்கள் எண்ணியுள்ளனர். போட்டிகள் ஏப்ரல் முதல் ஜுலை வரையிலான இடைப்பட்ட காலத்திலேயே நடந்துள்ளன. அப்போது மிகச் சில விளையாட்டுகளில் குறிப்பிடும்படியான நாடுகள் மட்டுமே பங்கேற்றுள்ளன. அதிலும் கிரேக்க மொழி பேசுபவர்கள் மட்டுமே விளையாட முடியும் என்ற நிலை இருந்துள்ளது. தற்போதுள்ள முறை மாதிரியில்லாமல் அனைத்து போட்டிகளும் கிரீஸில் உள்ள ஒலிம்பியாவிலேயே நடைபெற்றுள்ளன.



# முதல் ஒலிம்பிக் - 1896

நவீன யுகத்தில் முதல் ஒலிம்பிக் போட்டி 1896-ல் கிரீஸ் நாட்டின் ஏதென்ஸ் நகரில் நடைபெற்றது. கி.பி. 393-ல் ரோமாபுரி அரசர்முதலாம் தியோடோசியஸ் பண்டைய ஒலிம்பிக்கை ரத்து செய்தார்.

அதன் பின்னர் 1894 ஜுன் 23-ல் பிரான்ஸ் நாட்டின் பாரீஸில் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அமைக்கப்பட்டது. பண்டைய ஒலிம்பிக் கிரீஸில் உள்ள ஒலிம்பியாவில் நடைபெற்று வந்ததால், இயற்கையாக முதல் ஒலிம்பிக் போட்டியை நடத்தும் வாய்ப்பு கிரீஸுக்கு அளிக்கப்பட்டது.

1896 ஏப்ரல் 6 முதல் 15 வரை ஏதென்ஸில் நடைபெற்ற இந்த ஒலிம்பிக் போட்டியை கிரீஸ் அரசர் முதலாம் ஜார்ஜ் துவக்கி வைத்தார். 14 நாடுகளில் இருந்து 241 வீரர்கள் பங்கேற்றனர். 9 விளையாட்டுகளில் 43 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றன.

மோசமான வானிலை நிலவி வந்த போதிலும், இப்போட்டி மிகப்பெரிய வெற்றியாக அந்த காலகட்டத்தில் கருதப்பட்டது. அப்போதைய மிக முக்கியமான வீரர்கள் பங்கேற்காவிட்டாலும், அதிகமான நாடுகளிலிருந்து அதிகமான வீரர்கள் பங்கேற்ற மிகப்பெரிய போட்டி என்ற சிறப்பை முதல் போட்டி பெற்றது. நவீன யுகத்தில் மிகப்பெரிய ஸ்டேடியமான பனதிநாயகோ ஸ்டேடியம் மக்கள் கூட்டத்தில் நிரம்பி வழிந்தது. மாரத்தான் ஓட்டத்தில் கிரேக்க வீரர் ஸ்பிரிடன் லூயிஸ் வென்று தாயகத்துக்கு பெருமை சேர்த்தார். ஜெர்மனியை சேர்ந்த குத்துச்சண்டை வீரரும், ஜிம்னாஸ்டிக் வீரருமான கார்ல் ஷுமான் 4 தங்கம் வென்று அதிக பதக்கம் வென்றவர் என்ற பெருமையைப் பெற்றார். 1900-ல் ஒலிம்பிக்கைநடத்த கிரீஸ் மற்றும் அமெரிக்கா விரும்பினாலும், ஏற்கனவே பாரீஸில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டிருந்ததால் கிரீஸுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அதன் பின்னர் 2004-ல் தான் கிரீஸில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது என்பது வியப்பான உண்மை.

# முதுமையைத் தடுக்கும் நிலக்கடலை

முதுமையைத் தடுக்கவும், இளமையைத் தக்க வைத்துக் கொள்ளவும் உடலியல், மருந்தியல், உணவுத்துறை என பல்வேறு துறைகளில் விதவிதமான ஆராய்ச்சிகள் நடக்கின்றன. அமெரிக்காவில் உள்ள எல்பாசா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் முதுமையைத் தடுக்கும் ஆற்றல் நிலக்கடலைக்கு உண்டு என்பதைக் கண்டறிந்துள்ளனர். முதுமையை வராமல் தடுப்பதற்கு உடலின் நோய் எதிர்ப்பு சக்தி முக்கிய காரணியாக உள்ளது. நிலக்கடலையில் உள்ள உயிர்சத்துக்கள் விஷக் கிருமிகளை எதிர்த்துப் போரிடும் தன்மை கொண்டவை ஆகும். நிலக்கடலையை வேக வைத்துச் சாப்பிடும் போது நோய் எதிர்ப்பு சக்தி உடலுக்கு கிடைக்கிறது.

*சாப்பிடத் தெரியுமா?*

உலகின் சகல ஜீவராசிகளும் உண்டு. உயிர்க்கின்றன. சிலர் சாப்பிட்டு உயிர் வாழும்போது வேறு சிலரோ சாப்பிடுவதற்காகவே உயிர் வாழ்கிறார்கள்.

ஆனால் சாப்பிடும் முறை என்ன என்று பலருக்குத் தெரிவதில்லை.

சாப்பிட்ட உணவு செரித்து. பசி காதை அடைக்க வேண்டும். அப்போதுதான் சாப்பிடச் செல்ல வேண்டும்.

ரொம்ப ரொம்பக் கம்மியாய்ச் சாப்பிடவும் கூடாது. சாப்பாட்டுத் தட்டில் மலையைக் குவித்து வைத்து அதைக் காலி பண்ணவும் கூடாது.

கோபம். துக்கம். ஆத்திரம் போன்று ரொம்ப ஃபீலிங்ஸ் இருக்கும்போது சாப்பிடக் கூடாது.

ரொம்ப வேகமாக அள்ளிப் போடக் கூடாது. ரொம்ப ஸ்லோவாக வீட்டின் சுவரையைப் பார்த்துக் கொண்டு எதையோ யோசித்துக் கொண்டு சாப்பிடக்கூடாது. சாப்பாட்டில் கண் வைக்க வேண்டும்.

சாப்பாட்டுடன் ஸ்வீட் இருக்கிறதென்று முதலில் அதை ருசி பார்க்கக் கூடாது. அது உள்ளே போனவுடன் பசியை அடக்கி விடும்.

புளிப்பு. காரம் என்று காராசாரமாகச் சாப்பிடுபவர்கள் அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

எல்லாச் சுவைகளையும் அளவோடு உண்ண வேண்டும்.


*வியர்வையில் குளிப்பவரா நீங்கள்?*

எப்போது பார்த்தாலும் வியர்த்து வடியும் முகத்தோடு. கர்ச்சீஃபும் கையுமாக இருப்பவர்களுக்கு:

1.நிறையத் தண்ணீர் குடியுங்கள். அதிகம் தண்ணீர் குடிப்பதால் அதிகமாக வியர்ப்பதில்லை. அதிகம் வியர்ப்பதால்தான் அதிகமாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏனென்றால் உடலில் 70 சதவீதம் தண்ணீர் இருக்கிறது; இருக்க வேண்டும்.

2. இந்தத் தண்ணீர்ப் பஞ்ச காலத்திலும் ஒருநாளைக்குக் குறைந்தபட்சம் 2 வேளை குளிக்க வேண்டும். குளிக்கப் பயன்படுத்தும் சோப்பில் அலுமினியம் குளோரைடு அதிகமாக இருந்தால் நல்லது. இந்த அலுமினியம் குளோரைடு வியர்வையின் அளவை ஓரளவு குறைக்கும்.

3. இறுக்கமான ஆடைகளை விடத்தொளதொளப்பான ஆடைகளையே அணிய வேண்டும். இது உடலைக் காற்றோட்டமாக வைத்திருக்க உதவும். ஆடையில் வியர்வையின் வாசனை வராமலும் இருக்கும்.



# செம்பருத்தி

செம்பருத்தி நம்மிடம் நிறைய இருந்தாலும் இதன் டீ அறிமுகம் சீனாவில்தான். ஷங் ஷான் மருத்துவப் பல்கலைக்கழகம், ஹைபிஸ்கஸ் சபாடிரிபா என்ற ஒரு வகை செம்பருத்திப் பூவில் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் தன்மை இருப்பதாகவும், இரத்த கொழுப்பின் அளவைக் கட்டுப்படுத்தி இருதயத்தைக் காப்பதாகவும் ஆய்வு ஒன்றை வெளியிட்டது.

கூந்தல் வளர்ச்சி, நரை மறைந்து இயற்கையான கருமை சீரான இரத்த ஓட்டம், இரத்த அடர்த்தி குறைவது, பசியைத் தூண்டுவது, சிறுநீரை நல்முறையில் வெளியேற்றுவது, தொண்டைப்புண் ஆற்றுவது, தோல் பளபளப்புக்கு எப்போதும் சூடான உடல் கொண்டவர்களுக்கு என செம்பருத்தி டீ அருந்துவதால் கிடைக்கும் பலன்கள் அதிகம். காரணம் இதில் இருக்கும் 15 வகை அமினோ அமிலங்கள், வைட்டமின்கள், பாலஃபினால் பளேவினாய்டுகள், ஆந்த்ரோசையனன்கள் கூடவே சில கனிமப் பொருட்கள்

பூவை சூடிக்கொண்டது போதும் நல்ல மாற்றத்திற்கு டீயாகக் குடித்துப் பார்ப்போமே.

–புதுயுகம் ஆசிரியர் குழு

# வாழ்த்துக்கள்

மதுரை சீடு அறக்கட்டளை ஏற்பாட்டில் மதுரை Honey Well நிறுவனம் கீழ்கண்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்கிட இசைவு தெரிவித்துள்ளது. Honey Well கொடை உள்ளங்களுக்கு உளமார்ந்த நன்றிகள். உதவித் தொகைகள் பெறும் சிறப்பான மாணவத் தோழர்களை புதுயுகம் வாழ்த்தி மகிழ்கின்றது. வாழ்த்துக்கள்! வாழ்க!! வளமைகள் பெறுக!!! சீடு நிர்வாகக்குழு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| R.கார்த்திக் | இந்திரா நகர் | B.A.,IIIrd Year | RPS | அமெரிக்கன் கல்லூரி | ரூ. 5000 |
| A. அமுதா | S.M.நகர் | B.A. II Year | English | மீனாட்சி கல்லூரி | ரூ. 5000 |
| P. சரண்யா | கரும்பாலை | B.Sc., IInd Year | Zoology | மீனாட்சி கல்லூரி | ரூ. 5000 |
| R.பாஸ்கர்ராஜா | கரும்பாலை | B.Sc., Ist Year | Tourism and Hospitality Management | M.K.U. கல்லூரி | ரூ. 5000 |
| D.தங்கராஜ் | கரும்பாலை | B.A. Ist Year | Economics | மதுரைக் கல்லூரி | ரூ. 5000 |
| N. ராம்குமார் | P.T.காலனி | B.A., Ist Year | English | தியாகராஜர் கல்லூரி | ரூ. 5000 |
| C.அருண்குமார் | கரும்பாலை | B.Sc. Ist Year | Zoology | அமெரிக்கன் கல்லூரி | ரூ. 5000 |
| K. அழகிரி | கரும்பாலை | B.A. Ist Year | Tamil | அமெரிக்கன் கல்லூரி | ரூ. 5000 |
| S.சுல்தான் அலாவுதீன் | S.M.நகர் | Ist Year | I.T.I. Electrician | லயோலா I.T.I. | ரூ. 2000 |

| | | | | |
|---|---|---|---|---|
| C.கற்பக ஜோதி | கரும்பாலை | XII | O.C.P.M. பெண்கள் மேல்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| S.வினோத்குமார் | கரும்பாலை | XI | விருதுநகர் இந்துநாடார் மேல்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| C. சரண்யா | கரும்பாலை | XI | O.C.P.M. பெண்கள் மேல்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| M. சாமுண்டீஸ்வரி | கரும்பாலை | XI | O.C.P.M. பெண்கள் மேல்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| M.ஜன்னத் பிரதோஷ் | கரும்பாலை | XI | O.C.P.M. பெண்கள் மேல்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| R.யோகலெட்சுமி | தல்லாகுளம் | X | T.S.U.M.உயர்நிலைப்பள்ளி | ரூ. 1500 |
| M.பேச்சி(எ) செல்வம் | தல்லாகுளம் | X | T.S.U.M. உயர்நிலைப்பள்ளி | ரூ. 2000 |
| G.குருமூர்த்தி | நாராயணபுரம் | IX | T.S.U.M.உயர்நிலைப்பள்ளி | ரூ. 1500 |
| N.கார்த்திகா | தல்லாகுளம் | IX | T.S.U.M. உயர்நிலைப்பளளி | ரூ. 1500 |
| A.ஸ்ரீநாத் | தல்லாகுளம் | VIII | T.S.U.M. உயர்நிலைப்பள்ளி | ரூ. 1500 |

Honey Well நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட மொத்த உதவித்தொகை : ரூ. 60,000

# Need of Renaissance in Folklore

Folklore art is the main identification of a community. It's vital entertaining activities of the people. It teaches the children the traditional history, political history, literary history, social history, people's history, economical history and the institutional history.

Performing of this folklore is very helpful to pray the deities and re-formate their history and get them into practice. The importance of this performance is to restore the traditional values and signs. It also tells that what ought to be the social behaviour traditionally.

In SEED, this performance is done by the SEED kids and it'll imporovize the self-confidence of the children by themselves. It also enhances the skill development, good behaviour and the trial to re-take our declining arts. It's our duty to enhance our cultural values, which are being eliminated by the trend of fashion today.

It remains as a traditional mark of the society. It's done to maintain and empower the physical balance, voice modulation, individual skills development, self-confidence and tradition. This is the only thing, which gives excitement to both the viewers and participants. The main aim for performing the folklore is the entertainment and excitement.

Folklore Art means the dance and the physical movement performances, which was brought up by our ancestors and carried out and followed up by their followers even still now. It consists of the following traditional activities and the social behaviour and social welfare.

This folklore performance is about the village deities. Particularly, it is held in the village festivals. It's a hope that the gods and deities will be very happy, if these festivals are undertaken once in a year. These folklore performance are done to make please those gods. They are mostly our ancestors. In Tamil Nadu, this practice is in prevalent. These gods are also based on the Hindu Religion.

These are all only by the impact of the high-class Hindu people and heritage. But these gods are not defined for a certain control and it is very negligible according to the imagination.


Some arts are the expressions of the impact and anger towards the society. Praying process of village people towards gods may vary from village to village. Some people say that the village gods like Karuppasamy and Ayyanar are belonged to Jainism and Buddhism.

Behaviour of each god will differ from one another. To entertain these gods only, the folklore performance are being performed.

So, Let's try to make a renaissance in the folklore arts.

(A paper about "Folklore art", presented in the Children Folklore Conference, which was a part of the Tenth Annual Day Celebration of SEED)

C.Karpagajothi
XII



கரகம் - கலைநிகழ்வு 7ஆம் வகுப்பு



பொங்கல் விழா - கலைநிகழ்வு 6ஆம் வகுப்பு

# Tamizh Folklore Arts

The folklore arts formed naturally and united with the Nature. It has the place of feelings and emotions and makes people entertaining. That art is known as the folklore art.

The reason for many arts in early day was the people's happiness of the inner soul. These are the channels for human emotions and feelings. Nature, Knowledge, deep emotion,



simplicity and open minded are in these arts and united with religion and society.

Kummiyattam :

It's an important one in Thamizh arts. Women made a circle around a "Vilakku", means lamp and clap their hands artistically and rythematically. They sing songs like story based songs during the performance. Later these songs became a unique literature. It gives a kinds of independent to the women. It is an ancient art performed during festivals and marriage functions.

Kolattam :

Kolattam is being performed using two sticks and making sound by the coordination of each others. Girls stand in a circle and beat sticks in front and back, vice versa. Songs of praising god will be sung. Some girls pray God to bring a handsome bride. They sing and dance with the sticks rhthematically.

Silambattam :

This brave art is making sounds with sticks. It's an art of struggle and defence. An early writing "Nadasaari" deals with silambattam. Throwing sticks, taking steps and throwing sticks fastly are its basic. This tells us bravery and victory. It gave a way to prove bravery of a male.

Kavadiyattam :

It is related with Lord Muruga, the god of beauty. People used to take fasting and take this Kavadi. Kavadi is a small stick, decorated with colourful papers, flowers and peacock feather at the two ends of Kavadi. The Kavadi taker plugs with a small metal called, "vel" the mouth and tongue. "Kavuthadi" became Kavadi which means tied, hanging and taking. We don't feel the pain, when trekking mountains. This is taken in many places. The talent of Kavadi takers was controlled by religion. It was grown up by interested people. While performing this art, a skin instrument, "Naiyandi Melam" is played. The performer revolves the Kavadi on his shoulder in front and back.

Initially, Lord Murugan temples are located in hills and mountains only. So, people have to walk for a long time to reach the hills. So, they take such things, flowers, fruits and other things for worship by balancing a stick. Later, it became Kaavadi, a religious thing and became a performing art.

Karagattam :

It is an entertainment art during the Amman festival. People used to thank Amman by making pongal by newly harvested grains. They believe that, by the grace of Amman they live without any diseases and difficulties.

Karagattam is performed in all Amman festivals. Balancing of the Kudam (Pot) on the head is Karagattam. It was mentioned in Ancient, classical poem, Silappathikaram as "Kudakoothu". Karagam of God is filled by water. Karagam in professionals is filled with rice.

Oyilattam :

Folklore arts come out of unity and expressions of human life. It talks about our tradition and custom. Generally Kummi is for women and oyilkummi is for men. Men dressed beautifully and colourfully and having a cloth cover on head "Thalai Pakai" and kerchief in their hands while the rhythm changes, their steps changes. Mostly myth, epic and historical stories are used to sing.

Thevarattam :

This was performed in Madurai by Kambalathu Nayakkars. They are the owners of this art because of worshipping "Sakkamma Devi". Men only should participate in this art. Men wears shiny coloured clothes on their head and wear same kind of dress. "Urumi", a skin instrument will be played. I'll cheer up the blood nerves of the participants.

(A paper about "Folklore art", presented in the children Folklore conference, which was a part of the Tenth Annual Day Celebration of SEED)

Dr. Evangeline Manoharan

- C.Arunkumar, B.Sc.,

# சீடு அறக்கட்டளை - 2008 ஜுன், ஜுலை நடவடிக்கைகள்

1.6.08 MSCF, MSYF உறுப்பினர் சேர்க்கை

2.6.08 இன்று பள்ளிகள் திறந்தன. மாலை சீடு-ன் மகத்தான 10ஆம் ஆண்டு கல்விப்பணிகள் துவங்கின. அனைத்து சீடு அரங்கங்களிலும் குழந்தைள் விரும்பி சேரத் துவங்கிய நாள்.

3.6.08 சமுதாயக்கூடம், கரும்பாலை

258 குழந்தைகள் பங்குகொண்ட விழாவாக தேன்கூடு விருப்ப சேமிப்பு பகிர்வு விழா இனிதே நடைபெற்றது. சீடு குழந்தைகள் பேரவையின் சிறப்பான நடவடிக்கையான தேன்கூடு குழந்தைகள் வங்கி ரூ. 8262ஐ உறுப்பினர்களுக்கு பிரித்து வழங்கியது.

5.6.08 செந்தமிழ் நூலகம்

சீடு இளைஞர் பேரவையின் நடவடிக்கையான இளைஞர் சுயதேவை பூர்த்திக்குழுவின் 2007-08 ஆண்டின் நிதி பகிர்வு விழா சீடு-ன் மூத்த தொண்டர், ஆண்டாள்கொட்டாரம் கிராம நிர்வாக அலுவலர் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. ரூ.19200 ஐ 16 இளைஞர்கள் பகிர்ந்து கொண்டனர். இளைஞர்களின் பெற்றோர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

6.6.08 & 7.6.08 அனுகிரகா டிரஸ்ட், நொச்சிக்காரப்பட்டி, திண்டுக்கல்

FPCP மாநில கூடுகையில் மதுரை சீடு சார்பாக தொண்டர் சுல்தான் அலாவுதீன் கலந்துகொண்டார்.

7.6.08 செந்தமிழ் நூலகம்

நிர்வாக அறங்காவலர் அ.ச.கார்த்திக்பாரதி தலைமையில் 'ஜுன்-ஜுலை' பணிகள் என்ற தலைப்பில் தொண்டர், பணியாளர் கூட்டம் நடைபெற்றது.

8.6.08 செந்தமிழ் நூலகம்

'கற்பித்தல் முறைகள்' என்ற பொருளில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் - மன்சூர் அவர்கள் சீடு ஆசிரியத் தொண்டர்களுக்கு பயிற்சிகள் வழங்கினார். 20 இளைஞர்கள் பயன்பெற்றனர்.

9.6.08 சீடு நிகழ்ச்சி அலுவலகம்

சீடு குழந்தைளிடம் சுயவிபர (Bio-Data) விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு விபரங்கள்சேகரிக்கப்பட்டன.

10.6.08 சீடு நிகழ்ச்சி அலுவலகம்

குழந்தைகள் தங்கள் வகுப்புகளுக்கு மலர்களின் பெயரினை சூட்டி மகிழ்ந்தனர். சாமந்தி என்று பெயரிட்டுள்ள முதல் வகுப்பு குழந்தைகள் தாங்கள் சீடு அறக்கட்டளையில் படித்து வெளியேறும் வரை அப்பூவின் பெயர் கொண்டே அழைக்கப்படுவர்.

11.6.08 வாண்டுகள் அரங்கம்

அரங்க குழந்தைகளுக்கு திரைப்படம் திரையிடப்பட்டது.

12.6.08 வேர்கள் அரங்கம் - I

இன்று புதிய வேர்கள் அரங்கத்தில் எலெக்ட்ரிக்கல் வேலைகள் நடைபெற்றன.

13.6.08 தேடல்கள்அரங்கம்

சீடு மூத்த தொண்டர், கிராம நிர்வாக அலுவலர் பிரகாஷ் அவர்கள் அரசு, போட்டித் தேர்வுக்கான தயாரிப்பு வகுப்புகளை தொடங்கினார்.

14.6.08 கனவுகள் அரங்கம்

+2 மாணவர்களுக்கு சிறப்பு Accountancy வகுப்புகள் தொடங்கின.

15.6.08 • அமெரிக்கன் கல்லூரி, தியாகராஜர் கல்லூரி, S.N.கல்லூரி

சீடு இளைஞர்கள், கல்லூரிச் சூழல் குறித்து பார்வையிடல்களை நிகழ்த்தினர்.

15.6.08 • வேர்கள் அரங்கம்

குழந்தைகள் மேம்பாட்டில் தொண்டு நிறுவனங்களின் பங்கு என்ற தலைப்பில் நிதி அறங்காவலர் K.அன்பரசன் உரையாற்றினார். கனவுகள் அரங்க குழந்தைகள் மற்றும் சீடு தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

16.6.08 தமிழ்நாடு பாலிடெக்னிக்

அரசு சார்பில் வழங்கப்பட்ட SBI தேர்வு பயிற்சி வகுப்புகளுக்கு தொண்டர் முனியசாமி சென்று வந்தார்.

17.6.08 தேடல்கள் அரங்கம்

'குறும்படங்கள்' என்ற பொருளில் தொண்டர் R.கார்த்திக் கனவுகள் அரங்க குழந்தைகளிடையேயும் தேடல் அரங்க இளைஞர்களிடமும் உரையாற்றினார்.

குறும்பட அறிமுகம் மற்றும் அவற்றின் தேவைகள் போன்றவை அவர் உரையின் உள்ளடக்கங்களாக அமைந்தன.

18.6.08 MKU கல்லூரி, மதுரைக் கல்லூரி
சீடு இளைஞர்கள் கல்லூரிச் சூழல் பார்வையிடல்களில் பங்கேற்றனர்.

19.6.08 வேர்கள் அரங்கம்
'மனித உரிமைகள்' என்ற பொருளில் தொண்டர் S.சுல்தான்அலாவுதீன் தேடல் அரங்க இளைஞர்களிடையே பேசினார்

19.6.08 வாண்டுகள் அரங்கம்
தொண்டர். M.சிவகுருநாதன் பாடல் வகுப்பை நடத்தினார். வாண்டுகள் அரங்க குழந்தைகளிடையே புதிய பாடல்கள் உருவாயின.

20.6.08 கனவுகள் அரங்கம்
தொண்டர் R.கார்த்திக் சமூக மதிப்புகள் குறித்து குழந்தைகளிடையே உரையாற்றினார்.

21.6.08 வேர்கள் அரங்கம்
கோடை விடுமுறை கால நடவடிக்கைகள் பற்றிய மீள்பார்வை கூட்டத்தை தொண்டர் கௌசல்யா வழிநடத்தினார். நகைச்சுவை என்ற பொருளில் நடந்த தொண்டர் முனியசாமியின் உரை அந்நாளை சிறப்பாக்கியது.

22.6.08 நிகழ்ச்சி அலுவலகம்
2008-09 ஆம் ஆண்டுக்கான தேன்கூடு வங்கிக் கணக்கு அட்டை தயாரிப்புப் பணிகள் நடைபெற்றன.

23.6.08 நிகழ்ச்சி அலுவலகம்
தேன்கூடு வங்கி கணக்கு அட்டைமற்றும் சீடு சுயவிபர விண்ணப்பத்திற்குரிய குழந்தைகளின் பாஸ்போர்ட் சைஸ் புகைப்படங்கள் எடுக்கும் பணி நடைபெற்றது.

24.6.08 அனைத்து அரங்கங்கள்
சீடு குழந்தைகள் பேரவையின் ஒரு நடவடிக்கையான புதுயுகம் சிற்றிதழ் எல்லா அரங்கங்களிலும் விநியோகிக்கபட்டன.
பெற்றுக்கொண்ட குழந்தைகள் : 270
இளைஞர்கள் : 25

25.6.08 அனைத்து அரங்கங்கள்
பாலித்தீன் கவருடன், தடிமனானஅட்டையில் சுயவிபரம், போட்டோவுடன் கூடிய தேன்கூடு வங்கிக்கணக்கு அட்டை எல்லா குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டது.
தேன்கூடு வங்கி உறுப்பினர்களின் எண்ணிக்கை: 295

26.6.08 வாண்டுகள் அரங்கம்
புதுயுகம் படைப்பரங்க வகுப்புகள் நடைபெற்றன.

27.6.08 வேர்கள் அரங்கம்
புதுயுகம் படைப்பரங்க வகுப்புகள் நடைபெற்றன

28.6.08
- ஹோட்டல் செந்தூர்

எவிடன்ஸ் மையம் சார்பில் நடைபெற்ற மாநில அளவிலான வன்கொடுமை தடுப்புச் சட்ட கலந்துரையாடலில் தேடல் அரங்க பொறுப்பாளர் சுல்தான் அலாவுதீன் கலந்துகொண்டார்.

- மன்னர் கல்லூரி

SBI வங்கித்தேர்வு ஆலோசனைமுகாமில் சீடுஇளைஞர்கள் பங்கு கொண்டனர்.

29.6.08 கனவுகள் அரங்கம்
"வேலைவாய்ப்புக் கல்வி" என்ற தலைப்பில் நிர்வாக அறங்காவலர் அ.ச.கார்த்திக் பாரதி உரையாற்றினார். 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை சுமார் 45 குழந்தைகள் கலந்து கொண்டனர்.

30.6.08 கனவுகள் அரங்கம்
புதுயுகம் படைப்பரங்க வகுப்புகள் நடைபெற்றன.

1.7.08 முதலமாண்டு கல்லூரி இளைஞர்களுக்கு கல்லூரி திறந்தது 6 இளைஞர்கள் முதல் தலைமுறை கல்லூரி செல்பவர்களாக அமெரிக்கன் கல்லூரியில் தடம் பதித்தனர்.

1.7.08 அனைத்து அரங்கங்கள்
சீடு அரங்கங்களை worldwide பொதுமேலாளர் பிரதீப்குமார் மற்றும் இங்கிலாந்து தோழி ஹெரன் கேரிங் சீடு அரங்கங்களை பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

2.7.08 கனவுகள் அரங்கம்

கிராம நிர்வாக அலுவலர் பிரகாஷ் உதவியால் பாண்டியராஜன், நாகலெட்சுமி, சுமதி ஆகியோருக்கு சாதிச் சான்றிதழ்கள் பெற்றுத் தரப்பட்டன.

5.7.08 சென்னை
6.7.08 தொண்டர் M.மருதுபாண்டி பொறியியல் பட்டப்படிப்பு கலந்தாய்விற்கு சென்னை சென்று அரசு ஒதுக்கீட்டில் PSY கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் படிக்க இடம் பெற்று வந்தார்.

5.7.08 • புதிய கனவுகள் அரங்கம்

எலக்ட்ரிக் மற்றும் கதவு வேலைகளை தொண்டர் மாரிமுத்து பொறுப்பேற்று செய்து முடித்தார்.

• வைகைஅணை

FPCP, FCMRP மண்டல கூடுகைக்கு தொண்டர் சுல்தான் அலாவுதீன், மாணவர் முத்துகணேஷ் சென்று வந்தனர்.

6.7.08 • வாண்டுகள் அரங்கம்

40 குழந்தைகள் தொண்டர் O.மோகன் தலைமையில் புதிய விளையாட்டுகளை விளையாடினர்.

• மதுரை ஆவின் பால்பண்ணை

தொண்டர். சிவகுருநாதன் தலைமையில் 70 குழந்தைகள் மதுரை ஆவின் பால்பண்ணையை சுற்றிப்பார்த்து மகிழ்ந்தனர்.

• திருமலை நாயக்கர் மஹால்

தொண்டர். சரண்யா தலைமையில் 20 பெண் குழந்தைகள் மதுரை திருமலைநாயக்கர் மஹால் பார்வையிடலுக்கு சென்றனர். அங்கு மதுரை மாவட்ட ஆட்சியர் ஜவஹர் அவர்களிடம் உரையாடி மகிழ்ந்தனர். சில காலமாகவே மாவட்ட ஆட்சியர் மற்றும் சீடு குழந்தைகள் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றனர்.

• கனவுகள் அரங்கம்

"கனவுகளும், நனவுகளும்" என்ற தலைப்பில் 40 குழந்தைகளுக்கிடையே கலந்துரையாடல் நடைபெற்றது.

• தேடல்கள் அரங்கம்

4 இளைஞர்கள் SBI போட்டித்தேர்வை எதிர்கொண்டனர்.

9.7.08 நிகழ்ச்சி அலுவலகம்

நிர்வாக அறங்காவலர் அ.ச.கார்த்திக்பாரதி தலைமையில் "நாட்டுபுறக் கலைகள் குறித்த குழந்தைகளுக்கான மாநாடு" திட்டமிடுதல் குறித்து தொண்டர், பணியாளர் கூடுகை நடைபெற்றது.

10.7.08 • அனைத்து அரங்கங்கள்

நிதி அறங்காவலர் K.அன்பரசன்அவர்களின் 20ஆம் பிறந்தநாளையொட்டி தேனீர் விருந்து நடைபெற்றது.

• கனவுகள் அரங்கம்

தொண்டர் பிரகாஷ் அவர்களுக்கு பாண்டியராஜனின் தந்தை பரமன் சார்பில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

11.7.08 அனைத்து அரங்கங்கள்

நாட்டுப்புறக் கலைகளுக்கான மாநாடு குறித்த குழந்தைகள் கூட்டம்,பயிற்சி, தயாரிப்பு வேலைகள் நடைபெற்றன.

12.7.08 கப்பலூர்

FPCPயின் மாவட்ட கூடுகையில் சீடு குழந்தைகள் பேரவை உறுப்பினர்கள் மாணவன் பாண்டியராஜன் தலைமையில் பங்குகொண்டனர்.

13.7.08 சமுதாயக்கூடம், கரும்பாலை

சீடு முன்னாள் நிதி அறங்காவலர், மூத்த தொண்டர், பத்தாண்டு கால சீடு உறுப்பினர் K.கிருஷ்ணவேணியின் திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் சீடு தொண்டர்கள் மகிழ்ச்சியுடன் பங்குகொண்டனர்.

14.7.08 கனவுகள் அரங்கம்

சீடு-இன் சிறப்பான தொண்டர், நடன ஆசிரியர் S.முருகபாண்டியின் சகோதரி பாண்டிமீனா (செவிலியர்) திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சியில் மகிழ்வுடன் பங்கேற்றனர். சகோதரி பாண்டிமீனா சீடு-ன் இரண்டாண்டு கால மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

சமுதாயக் கூடம்

அனைத்து வகுப்பினருக்கும் சிறப்பு பாடவகுப்புகள் நடைபெற்றன.

15.7.08, 16.7.08, 17.7.08 — அனைத்து அரங்கங்கள்
மாலை 5.30 மணி முதல் 7.30 மணி வரை பாடவேளைகளும், 7.30 முதல் 9.30 வரை நாட்டுப்புறக் கலைகளுக்கானமாநாட்டு வேலைகள் நடைபெற்றன

18.7.08 — சமுதாயக்கூடம், கரும்பாலை
நாட்டுப்புற கலைகள் குறித்த குழந்தைகளுக்கான மாநாடு நடைபெற்றது. 500 குழந்தைகள் பங்கேற்றனர். அமெரிக்கன் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் திரு. இவாஞ்சலின் மனோகரன் மற்றும் SAGE அமெரிக்க மாணவ, மாணவிகள் **கிறிஸ்டின்** மற்றும் **ஏப்ரல்** தலைமையில் பங்குகொண்டனர். இரவு கண்கவர் வண்ணமிகு பேரணியும் நடைபெற்றது.

19.7.08 — கனவுகள் அரங்கம்
நாட்டுப்புறக் கலைகள் குறித்த குழந்தைகளுக்கான மாநாட்டின் இரண்டாம் நாளான இன்று அமெரிக்க பல்கலைக்கழக பேராசிரியர்கள் Joseline (அரசி), French Bonnie (தாமரை) LIC முகவர் நவஜோதி தலைமையில் பங்குகொண்டனர். குழந்தைகள் தங்கள் அனுபவங்ளை பகிர்ந்து கொண்டனர்.

20.7.08 — அனைத்து அரங்கங்கள்
மாநாட்டில் சிறப்பாக பங்கேற்றவர்களுக்கு புகைப்பட நினைவுப்பரிசுகளை நிர்வாக அறங்காவலர் அ.ச.கார்த்திக்பாரதி வழங்கினார். மீடியா தொலைக்காட்சி மாநாடு பற்றிய செய்தியை ஒளிபரப்பியது.

22.7.08 — தினமணி நாளிதழ் நாட்டுப்புறக்கலைகள் குறித்த குழந்தைகளுக்கான மாநாடு பற்றிய செய்தி வெளியிட்டிருந்தது.

23.7.08 — நிகழ்ச்சி அலுவலகம்
இடைப்பருவத்தேர்வுக்காக குழந்தைகளை தயார் செய்வது பற்றிய பணியாளர், தொண்டர் கூட்டம் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மன்சூர் அலி தலைமையில் நடைபெற்றது.

24.7.08 & 31.7.08 — அனைத்து அரங்கங்கள்
இடைப்பருவத்தேர்வு தயாரிப்பு வேலைகள்

தினசரி வகுப்பு அட்டவணை :
வாண்டுகள், வேர்கள், கனவுகள்
தினசரி மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

தேடல்கள் அரங்கம்
தினசரி இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை

ஞாயிறு மற்றும் இதர விடுமுறை நாட்கள் :
காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை
மதியம் 2.00 மணி முதல் 4.00 மணி வரை
மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை

M.மன்சூர்அலி
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்

**இதழ் வெளியீட்டுக் குழு**
**C.அருண்குமார் B.Sc. (தொண்டர் பொறுப்பாளர்)**
**C.கற்பக ஜோதி, V.திவ்யபாரதி, S.முத்துகணேஷ், M.மாணிக்கராஜ்**

**குழந்தைகளின் புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் வெளியீட்டு முயற்சிக்கு உதவுவோர்**
**சென்னை ஆஷா**
**திருமிகு. வே.மாரியம்மாள், திருமிகு. அ.ச.கார்த்திக் பாரதி, திருமிகு. க.அன்பரசன்**
**மதுரை சீடு நிர்வாகக் குழு**

**தொடர்புக்கு: புதுயுகம் சிற்றிதழ்**
**சீடு அறக்கட்டளை**
**அர்ஜுன் சண்முகா இல்லம், 439/1, கிழக்குத் தெரு, கரும்பாலை, மதுரை 20.**
**பேசி : 9894805446, 0452 6456503, 9244556503**
**மின்னஞ்சல் : mdu.seed1999@yahoo.co.in**
**வலைதளம் : www.ashanet.org # seednarpanigal**
**www.madurai-seed.org**

அச்சிட்டோர் : ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், 13, இ2இ2 ரோடு, சி.எஸ்.ஐ. சர்ச் பின்புறம், மதுரை-2. போன் : 3256908, 2524734, 9865935571

# MADURAI - SEED

SINCE 1999

## மதுரை சீடு
## குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாட்டு பணிகள்

10ஆம் ஆண்டுகளில்...

2008 - 2009

### I. குழந்தைகளுக்கான முழுமைத்துவக் கல்வி மையங்கள்

- வாண்டுகள் அரங்கம் • வேர்கள் அரங்கம் • கனவுகள் அரங்கம்

  (இனிய குழந்தைகள் உலகம் படைப்பதற்கான முயற்சிகள்)

இளைஞர்களுக்கான முழுமைத்துவக் கல்வி மையங்கள்

- தேடல்கள் அரங்கம்

  (இளைஞர்க்கான ஆளுமை மேம்பாடு மற்றும் வாழ்வியல் பயிற்சிக்கான களம்)

### II. மதுரை சீடு குழந்தைகள் பேரவை (MSCF)

- செந்தமிழ் நூலகம்
- வான்முகில் கலைக்குழு
- தேன்கூடு குழந்தைகள் வங்கி
- புதுயுகம் சிந்திதழ் (இருமாதங்களுக்கு ஒருமுறை)

### III. மதுரை சீடு இளைஞர் பேரவை (MSYF)

- ஆசிரியத் தொண்டர் குழு
- சிறப்புத் தொண்டர் குழு
- கலைக்குழு
- இளைஞர் வங்கி
- புதிய வெளிச்சங்கள் சிந்திதழ் (காலாண்டு)

---

மதுரை சீடு அறக்கட்டளை நலிவுற்ற குழந்தைகள், இளைஞர்கள் மேம்பாடு மற்றும்
குழந்தைகள் உரிமைக்காகவும், வளமைக்கல்விக்காகவும், பணி செய்யும் ஓர் தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.